DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

| | |
|---|---|
| Calender | --- MC.15/2022 |
| Miscellaneous | --- |
| Preliminary Register | --- |
| Sessions | --- PW.1 |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Case |

Name : இருளாயி அம்மாள்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of 12.09.2023

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை –</u>**

**நான் திருமணத்திற்கு முன்பு என்ன வேலை செய்தேன் என்று கேட்டால் கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்று கேட்டால் 2 குழந்தைகளை கவனித்து கொள்ள வீட்டில் இருந்து வருகிறேன். எதிர்மனுதாரர் என்னை எவ்வித கொடுமையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பிறகு ஆடம்பரமாக வாழ ஆசைப்படுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் நான்தான் தேவையில்லாமல் சண்டை போடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்தேன். சில நேரங்களில் எதிர்மனுதாரர் என்னை அழைத்து கொண்டு போய் வீட்டில் வைத்திருப்பார். அவரது பெற்றோரின்**

பேச்சை கேட்டு என்னை அடித்து கொடுமைப்படுத்தி செலவுக்கு பணம் தராமல் கொடுமைப்படுத்துவார். 2ம் குழந்தை பிறந்த விபரத்தை நான் எதிர்மனுதாரரிடன் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பப்படுகிறேனா என்றால் எதிர்மனுதாரர் என்னை வீட்டிற்கு அழைத்து சென்று அடிப்பார். அதனால் நான் அவருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. நான் எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்ப்பு இருப்பது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேனா என்றால் உள்ளேன். எதிர்மனுதாரர் அவரது தம்பி மனைவியுடன் தொடர்பில் உள்ளார். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான்தான் வேண்டுமென்றே மறுத்துவிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கோரியுள்ள பரிகாரம் நிலைக்கதக்கதுதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

(Complainant present. Respondent present)